# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 18 செவ்வாய்க்கிழமை 03.09.2024 கதிர் 351







# தமிழ்ப் பொது வேட்பாளரின் விஞ்ஞாபனம் யாழில் இன்று வெளியிட்டு வைக்கப்பட்டது

- தமிழர் இறைமையும் உரிமையும் கொண்ட தேசிய இனம்
- ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட தீர்வை ஏற்க முடியாது
- பன்னாட்டு ஆதரவில் இடைக்கால பாதுகாப்பு ஏற்பாடு







தமிழ்ப்பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று காலை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் களமிறக்கப்பட்டுள்ளார்.

பத்து பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ள பொது வேட்பாளருக்கான விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் பலவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். 2

## சிலிண்டர் சின்னத்தை வலுப்படுத்தி எதிர்காலத்தை வெற்றிகொள்வோம்

### ஈ.பி.டிபியின் ஊடக பேச்சார் ரங்கேஸ்வரன்



உட்கட்சி அதிகார மமதையில் இருப்பவர்களின் நலன்களுக்காக தமிழ் மக்களின் வாக்குகள் சிதறக்கூடாது. அதேநேரம் அதிகாரப் போட்டியில் அவசரமாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் கூறுகையில்–

தற்போது ஜனாதிபதி தேர்தல் நெருங்கிவரும் சூழலில் சில கட்சிகள் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்த பின்னரே தத்தமது கட்சிகளின் நிலைப்பாட்டை வெளியிடுவதாக கூறியிருந்தார்கள்.

தற்போது பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்துள்ள சூழலில் தமிழ் மக்களின் அரசியல் நலன்சார்ந்த எவ்விதமான திட்டங்களும் உள்ளடக்கப்படாத வேட்பாளர்களுக்கு எழுந்தமானமாக தத்தமது அதிகாரத்தை 7

## தமிழ் மக்களை பழிவாங்கிய ரணில் சபையில் சுமந்திரன் குற்றச்சாட்டு



மாகாண சபைத் தேர்தல் திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற முடியாது இறுதித் தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தடுத்துள்ளதன் மூலம் அவர் ஒரு இனவாதி என்பதை நிரூபித்துள்ளதுடன், தமிழர்களை பழிவாங்கியும் விட்டார் என இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய எம்.ஏ.சுமந்திரன், என்னால் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச்சட்டம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் 7

## வவுனியாவில் சஜித்தின் பிரசாரம்



ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரச்சாரக் கூட்டம் வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள யங்ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெற்றது.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அழைத்து வரப்பட்ட 7

**தமிழ்.....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த 46 ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு பதில்வினையாற்றும் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டு இந்த முறை தமிழ்மக்கள் செயல்முனைப்போடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது என்று எடுக்கப்பட்ட முடிவின் விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும் என்று விஞ்ஞானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவார். அதேசமயம், இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கித் தமிழ் மக்களின் கூட்டு விருப்பத்தை உலக சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவார். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவார்.

இந்த அடிப்படையில், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது இனப் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வானது பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.

1- இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத்தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2- தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே புதிய யாப்பு ஆனது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில் தேசங்களின் ஒன்றிணைவாக அமைய வேண்டும். அதாவது புதிய யாப்பானது இலங்கைத் தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் கட்டமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

3- ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த ஒரு அரசியல் தீர்வாலும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது.

4-இந்த விடயத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதனை தாமே நிர்ணயிப்பதற்குப் பொருத்தமான பன்னாட்டு ஏற்பாடுகளைக் கோருவதற்கு உரித்துடையவர்கள்.

5-தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணங்களை எல்லையாகக் கொண்டு அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் முஸ்லீம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை நடாத்த தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புத் தயாராக உள்ளது.

6-மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வரும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

7-ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். இதுவரையிலுமான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக ஐநா பொதுச் செயலர் பொறுப்பு கூறலை ஐநா பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும்.

8-அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும், நமது வளங்கள் இன அழிப்பின் ஒரு பகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்.

இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர் தேசத்துக்கு இருக்க வேண்டும்.

9-ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின் கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ் மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக்கட்டமைப்பின் பொது வேட்பாளராகிய பா.அரியநேத்திரனுடைய சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக முன் நிறுத்தப்படவில்லை. அவர் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கச் செய்வதற்காகவுமே முன் நிறுத்தப்படுகிறார். ஒன்று திரண்ட தமிழ் மக்கள் உலகத்தின் முன்னும் தென்னிலங்கையின் முன்னும் பலமாக நிமிர்ந்து நிற்பார்கள். அதாவது அரியநேத்திரனுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ்மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான். எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசியக் கடமையாகும். சங்குச் சின்னத்துக்கு ஆக்கக்கூடிய தமிழ் வாக்குகளை வழங்குவதன் மூலம் அன்பான தமிழ் மக்களே எங்களை நாங்களே வெற்றி பெற வைப்போம். இவ்வாறு விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொப்பி, கோட்டுடன் வரும் பேரினவாத ஏஜெண்டுகளை தோற்கடிக்க வேண்டும்

## வவுனியாவில் ரிஷாட் ஆவேசம்



"தொப்பி அணிந்த ஒருவரை மௌலவியாகக் காண்பித்து, முஸ்லிம்களை ஏமாற்றும் கபடத்தனங்களை அநுரகுமார திஸாநாயக்க கைவிட வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, வவுனியாவில் இன்று செவ்வாய்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், மக்கள் திரளுக்கு முன்பாக உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

"சாப்பாட்டுப் பார்சல்களுக்கும் சில்லறைச் சலுகைகளுக்கும் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்கும் கூட்டத்தினரிடம் எச்சரிக்கையாக இருங்கள். நாட்டின் பொருளாதாரத்தையும் இந்தக் கள்வர் கூட்டமே களவாடியது. ராஜபக்ஷக்களிடம் இருந்த இக்கூட்டம், இப்போது ரணிலின் பாதுகாப்பில் தஞ்சமடைந்துள்ளது. இராஜாங்க அமைச்சர் ஒருவர் இவ்வளவு காலமும் எதையும்செய்யாமல், இப்போதுதான் பொழுது விடிந்ததுபோல ஓடித்திரிகிறார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டு, சகல சமூகங்களையும் சமமாக நேசிக்கும் பண்பட்ட அரசியல்வாதி சஜித் பிரேமதாச. பாடசாலைகளுக்கு "ஸ்மார்ட்" வகுப்பறைகள், பஸ்வண்டிகளை வழங்குகிறார். அனுரகுமார திஸாநாயக்க கல்வி பயின்ற பாடசாலைக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

சஜித் பிரேமதாசவின் வெற்றிக்கு இன்னும் சொற்பகாலங்களே உள்ளன. பஸ் வண்டிகளில் மக்களைக் கொண்டுவந்து, மாயை காட்டும் அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்ப நாட்டு மக்கள் தயார். அரசியல் வாழ்வில் எதையுமே செய்யாத அனுரகுமார திஸாநாயக்க, ஆட்சிக்கு வந்தால், எதையும் செய்யுமளவுக்கு அனுபவம் இருக்காது. இவரது ஆட்சியைக் கற்பனை செய்யவே பயமாக உள்ளது.

அநுரகுமாரவுக்கு தொப்பி அணிந்த மௌலவி இருப்பதைப் போலவே, ரணில் விக்ரமசிங்கவுக்கு "கோட்" அணிந்த அலிசப்ரி இருக்கிறார். முஸ்லிம்களை ஏமாற்ற வந்த பேரினவாத ஏஜெண்டுகளே இவர்கள். எனவே இந்த தருணத்தில் நிதானமாக செயற்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.







செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட maalaikkathir@gmail.com

# சமஷ்டி என்றால்தான் ஆதரவு என்ற சுமந்திரன் சஜித்தை ஆதரிக்க முடிவெடுத்தது எதற்காக?

## கேள்வி எழுப்புகிறார் சித்தார்த்தன்



'தமிழ் பொத வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலக மாட்டார். விலகுமாறு கூறுவது சுமந்திரன் எம்.பி.யின் தனிப்பட்ட ஆசை மட்டுமே' என தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான தருமலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்வி.தர்மலிங்கத்தின் 39 ஆவது நினைவுதின நிகழ்வில் ஊடகவியலாளரின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், 'இணைந்த வடக்கு,கிழக்கில் சமஸ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைத்து அதனை தந்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கி சிங்கள மக்களுக்கும் பகிரங்கமாக அறிவிக்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கே தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்குமென சுமந்திரன் அறிவித்திருந்தார் என்று சுட்டிக்காட்டினார்.

'ஆனால் தற்போது தமிழரசு கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கப் போவதாக அவர் அறிவித்துள்ளமை அவர் ஏற்கனவே கூறிய கருத்துக்கு முரணாக உள்ளது. ஏனெனில் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாகயாகவில்லை. அந்த விஞ்ஞாபனத்தில் சமஷ்டித் தீர்வு தொடர்பில் உள்ளடக்கிய விஞ்ஞாபனமே வெளிவர உள்ளது.

ஆனால் சுமந்திரன் சமஷ்டித் தீர்வை உள்ளடக்கிய தேர்தல்விஞ்ஞாபனத்திற்கு ஆதரவு வழங்கப்போவதாக அறிவித்துவிட்டு சமஷ்டி தீர்வு தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படாத சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு எவ்வாறு ஆதரவு வழங்கினார்? என்று சித்தர்த்தன் கேளவி எழுப்பினர்.

'அவர் தனது கருத்தில் உறுதியாக இருந்திருந்தால் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவந்த பின்னர் யாருக்கு ஆதரவு என குறிப்பிட்டு இருக்கலாம். சஜித்துக்கு ஆதரவு வழங்கப் போவதான தீர்மானத்தை எடுப்பதற்கு தமிழரசு கட்சிக்கு உரிமை இருந்தாலும் பொது வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுமாறு கூறுவதற்கு சுமந்திரனுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. ஆகவே தமிழ் பொது வேட்பாளர் வடக்கு கிழக்கு சார்ந்து தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலில் களம் இறங்கிய நிலையில் எந்த காரணமும் கொண்டும் தேர்தலில் இருந்து விலக மாட்டார் அவருக்கான பூரண ஆதரவை நாம் வழங்குவோம்" என்றார்.

# ஒற்றை ஆட்சியை வலியுறுத்தும் சஜித்துக்கு சுமந்திரன் ஆதரவா?

## கேள்வி எழுப்புகின்றார் கஜேந்திரன்



ஏக்கிய ராஜ்ஜியவில் சமஷ்டி இருக்கிறது என்று தமிழ் மக்களை ஏமாற்றிய சுமந்திரன் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கிவிட்டு மக்களுக்கு பொய் விளக்கம் கூறுவார் என தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ் காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு –

'சுமந்திரன் என்பவர் யார் என்பது தொடர்பில் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும் .நல்லாட்சி அரசாங்கத்தில் ஐ.நா.வில் கால அவகாசம் பெற்றுக்கொடுப்பதற்கு சம்பந்தர் தலைமையிலான அணியில் சுமந்திரன் அரசாங்கத்தை காப்பாற்றினார்.

அது மட்டுமல்லாது புதிய அரசியல் அமைப்பை உருவாக்குகிறோம் எனக் கூறிக்கொண்டு ஏக்கிய ராஜ்ஜியவில் சமஷ்டி இருக்கிறது என மக்களுக்கு பொய்களை கூறிவந்தவர். அதேபோன்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப்போராட்டத்தை திசை திருப்பி இலங்கையில் இடம் பெற்ற இன அழிப்புக்கு தமிழ் மக்கள் உள்ளக விசாரணையை வலியுறுத்தி போராட்டம் செய்தார்கள் என பாராளுமன்றத்தில் தெரிவித்தவர்.

அப்போது எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நடாளுமன்றத்தில் தெளிவாகஎமது போராட்டம் சர்வதேச விசாரணையை கோரி இடம்பெற்றதே அல்லாமல் உள்ளக விசாரணையை கோரிஇடம்பெறவில்லை என அழுத்தம் திருத்தமாக கூறினார்.

இவ்வாறு பொய்களை உரைத்த சுமந்திரன் தற்போது தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி தீர்வினை கேட்கும் நிலையில் ஒற்றையாட்சி அரசியலமைப்பை தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கொண்ட சஜித் பிரேமதாசாவுக்கு தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்குவதாக சுமந்திரன் அறிவித்திருக்கிறார். தமிழ் மக்களிடம் சமஷ்டித் தீர்வை முன்வைப்போம் என தேர்தல் காலத்தில் வாக்குகளை பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றை ஆட்சி சிங்கள வேட்பாளருக்கு ஆதரவை வழங்கியமைக்கு ஒட்டுமொத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்பேற்கவேண்டும்."



# ஜனாதிபதி தேர்தலும் 'இமேஜ்' அரசியலும்





**குமுத் ஜெயவர்த்தன**

இலங்கையில் தேர்தல்களின் போது, குறிப்பாக ஜனாதிபதி தேர்தலின்போது, வேட்பாளர்களின் தோற்றத்தைக் குறிவைத்து பல்வேறு கருத்துகள் பேசப்படுவது வழக்கம் .

இலங்கையில் ஒரு நபரின் மீசை, உருவம், ஆங்கிலப் புலமை மற்றும் சிங்களம் பேசும் திறன், உடைகள், குழந்தைகள் இருப்பது போன்ற பல்வேறு வெளிப்புற காரணிகள் அடிப்படையில் அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்கும் போக்கு இருப்பதாக ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் விஷாக சூரியபண்டார சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் மக்கள் போராட்டத்துக்கு பிறகு கிட்டத தட்ட இரண்டு வருடங்களுக்கு பின்னர் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. இம்முறை தேர்தலில் அத்தகைய பிம்பங்கள் எந்தளவுக்கு செல்லுபடியாகும் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று.

ஆசியாவில் "இமேஜ் அரசியல்" பரவலாக இருக் கிறது. ஐரோப்பாவிலும் சில இடங்களில் இமேஜ் அரசி யல் காணப்படுகிறது. சமீபத்தில், பிரிட்டன் பிரதமர் சர் கெய்ர் ஸ்டார்மர் தேர்தல் வெற்றிக்குப் பிறகு ஹஇமேஜ் அரசியல்' குறித்து கருத்து தெரிவித்தார். பிரிட்டனின் பிரதமராக பதவியேற்ற பிறகு, சர் கெய்ர் ஸ்டார்மர் தனது வெற்றி உரையில், மக்கள் "மாற்றத்திற்கு தயாராக உள்ளனர்" என்றும், "இமேஜ் அரசியலுக்கு முடிவு கட்டுவோம்" என்றும் சபதம் செய்தார்.

மஹிந்த ராஜபக்ஸ கட்டியெழுப்பிய பிம்பம் கோத்த பய ராஜபக்ஸவை ஜனாதிபதி பதவிக்கு வரச் செய்தது. மஹிந்த ராஜபக்ஷ பெரிய மீசையுடன் திடகாத்திர உடலைக் கொண்டு தனது வெளி பிம்பத்தை அதிகரிக்க பல யுக்திகளை கையாண்ட அரசியல்வாதி.

தேசிய உடை மற்றும் குராஹான் ஸ்கார்ஃப் அணிவது, இனம் மற்றும் மதம் தொடர்பாக அடிக்கடி பயன்படுத்தப்படும் வார்த்தைகள் ஆகியவை மட்டு மின்றி 30 ஆண்டு கால உள்நாட்டுப் போரின் முடிவும் ராஜபக்ஸவின் இமேஜ் அரசியல் வளர்ச்சியில் வலு வான தாக்கத்தை ஏற்படுத்தின.

மகிந்த ராஜபக்ஸ தேசிய உடை அணியும் கிராம வாசி என்ற கருத்தும் பரப்பட்டது. அவரது ஆதரவாளர்கள் அவரை 'பையா', ஹகிராம மேயர்' என்றும் செல்லமாக அழைத்தனர்.

"ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை பண மோசடி" (Helping Hambantota) போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்ட போதும் அவர் கட்டமைத்த பிம்பத்தினால் இரண்டு முறை இலங்கை அதிபராக அவரால் வர முடிந்தது.

மஹிந்த ராஜபக்ஸ கட்டியெழுப்பிய பிம்பம் கோத்தபய ராஜபக்ஸவை ஜனாதிபதி பதவிக்கு வரச் செய்ததுடன், அதுமட்டுமல்லாமல் கோத்தபயவும் தான் ஒரு வலுவான தலைவர் என்ற பிம்பத்தை உருவாக்கியிருந்தார்.

மற்றொரு புறம், ரணில் விக்கிரமசிங்கவைப் பொருத்தவரையில், இலங்கையின் பெரும்பாலான வாக்காளர்கள் மத்தியில் அவர் பற்றி உருவான பிம்பம் வித்தியாசமானது.

ரணில் விக்கிரமசிங்கவின் உடைகள், ஆங்கிலம், போரை காட்டிலும் பேச்சுவார்த்தையில் காட்டிய ஆர்வம் போன்ற காரணங்களால் அவர் 'துரோகி, மேற்குலக சார்புடைய ஆட்சியாளர்' என எதிர்க்கட்சிகளால் சித்தரிக்கப்பட்டார்.

"இலங்கையில் உள்ள பெரும்பான்மையான வாக்காளர்கள் பல ஆண்டுகளாக இமேஜ் அரசியலை பார்த்து, தலைவர்களை தேர்வு செய்து பாடம் கற்றுள்ளனர். இந்த ஜனாதிபதித் தேர்தலில் அந்த வெளி பிம்பம் செல்லுபடியாகாது என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்கு ஆளான பிந்தைய சூழலில், ஜனாதிபதி தேர்தலின் போது இது கண்டுக் கொள்ளப்படாது என்று தோன்றுகிறது" என்று பேராசிரியர் விசாக சூரியபண்டார தெரிவித்தார்.

"இப்போது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப் பக் கூடிய, தெளிவான செயல் திட்டம் கொண்ட, தொலைநோக்குப் பார்வை உள்ள, வெளிநாடுகளை சமாளிக்கக்கூடிய ஒருவரை தலைவராக நியமிக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். வெளிப்புற பிம்பம் மீதான நம்பிக்கை இப்போது குறைந்துவிட்டது," என்று பேராசிரியர் கூறினார்.

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்க ளின் வெளி பிம்பம் தொடர்பான எவ்வித விமர்சனங்களும் அவமான கருத்துகளும் இடம்பெறவில்லை என அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் ஜயதேவ உயங்கொட தெரிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மிகவும் விமர்சிக்கப்பட்ட அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்க தான் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை எடுத்துக்கொண்டால், பொதுஜன பெரமுன, தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகள் அவரை விமர்சித்துள்ளன. இந்த ஜனாதிபதி தேர்தலில் அவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படவில்லை. முன்னர் அவரை விமர்சித்த பலர் தற்போது அவருடன் உள்ளனர். தற்போது இருவரும் பரஸ்பர உதவிகளை பெற்று வருகின்றனர். எனினும், ஆதரவற்ற நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றும் நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க மக்களிடம் நெருக்கம் காட்டுவதில்லை என்பது பேராசிரியரின் கருத்து.

"ரணில் விக்கிரமசிங்க மிகவும் மதிப்புமிக்க உடைகளை அணிந்து கொண்டு தனது வாக்காளர்களை உரையாற்றுவதற்காக கூட்டங்களுக்குச் செல்வதை நான் பார்த்திருக்கிறேன். அவருடைய சூட், காலணி மற்றும் டை மிகவும் விலை உயர்ந்தது. ஆனால் இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் அவ்வாறு ஆடைகள் அணிய முடியாத நிலையில் உள்ளனர். அப்படியானால் ரணில் விக்கிரமசிங்க மீது மக்களுக்கு என்ன மாதிரியான பிம்பம் இருக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது." என்கிறார்.

தலைவர்களின் வெளித் தோற்றத்தை பற்றி இப்போது மக்கள் கவலைப்படுவதில்லை. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேட்பாளர்களின் வெளி பிம்பம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். பிம்பங்களை வைத்து அரசியலை தீர்மானிக்கும் நிலை தற்போது மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்த நேரத்தில், வெளி பிம்பம் பற்றிய கவலை குறைந்துள்ளது. மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால், ஒரு தெளிவான செயல் திட்டத்துடன் கூடிய தலைவரையே அவர்கள் விரும்புகிறார்கள். எனவே, இப்போது இந்த இமேஜ் அரசியலை பற்றிப் பேசுவது குறைந்துள்ளது என்று நான் நினைக்கிறேன்" என்று டாக்டர் தயான் கூறினார். நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஒரு குறிப்பிட்ட செயல் திட்டம் இருப்பதாக மக்கள் நம்ப வைக்கக்கூடிய வேட்பாளர் இம்முறை வெற்றி பெறுவார் எனவும் தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

# யாழ். மாவட்டத்தில் சுமார் 5 லட்சம் பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்

- 2,463 பேர் முதல் முறையாக வாக்களிக்கின்றார்கள்
- 511 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்
- அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவிப்பு






எதிர்வரும் 21 ஆம் திகதி இடம் பெற உள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும்தெரிவத்தாட்சி அதிகாரி மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்றைய இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அந்த வகையில்யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நான்கு லட்சத்தி 92 280 பேர் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

இவர்களில் குறை நிரப்பு பட்டியலில் இருந்து 2463 பேர் இணைக்கப்பட்டுள்ளர்.

அதாவது 31 ஆம் தேதி ஐந்தாம் மாதம் 2024 ஆம் ஆண்டு 18 வயதினை பூர்த்தி அடைந்தவர்கள், வாக்காளர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு செயற்பாடுகள் இடம் பெற உள்ளன.

அதற்கான வாக்காளர்களுக்கான அட்டைகள் இன்றைய தினம் தபால் நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளன. இன்று முதல் அதற்கான விநியோகம் மேற்கொள்ளப்பட உள்ளது.

அதே வகையில் எங்களுடைய மாவட்டத்தில் 1792 பேர், விசேட தேவைக்குரிய வாக்காளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது வாக்கினை சுமுகமான முறையில் அளிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

விசேட தேவைக்குட்பட்டவர்களில் அதாவது, நிரந்தர வலிமை இழப்புக்கு உட்பட்டவர்கள் 262 பேருக்கு தேர்தல் ஆணைக்குழுவில் இருந்து விசேட அடையாள அட்டை கிடைக்க பெற்று அவை தற்போது வழங்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கான அடையாள அட்டை கிராம சேவையாளர் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில், 41 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

அதேபோல் தபால் வாக்குகளை எண்ணுவதற்காக 14 வாக்கு என்னும் நிலையங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்களிப்பு இம்மாதம் நாளை நான்காம் திகதி தேர்தல் அலுவலகம் மாவட்ட செயலகம், ஆகியவற்றில் இடம் பெற உள்ளன.

ஐந்தாம் ஆறாம் திகதிகளில் ஏனைய திணைக்கலங்களுக்கான வாக்களிப்புகள் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன, நான்கு மற்றும் ஆறாம் திகதிகளில் பொலிஸ் நிலையங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக இதனை தவற விட்டவர்கள், 11 மற்றும் 12ஆம் திகதிகளில் மாவட்டச் செயலகத்தில் மீள் வாக்களிப்பு செய்வதற்கான ஏற்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொருத்தவரையில், 21,773 தபால்மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இத்துடன் இன்றைய நிலையில் எமது மாவட்டத்தில், தேர்தல் தொடர்பான ஏழு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை அனைத்தும் சட்ட மீறல்களாக காணப்படுகின்றன" என்றும் மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரி மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

இதேவேளையில் கஃபே மற்றும் பஃரல் ஆகிய உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும், ஐரேப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பும் யாழ்ப்பாணத்திலும் தமது கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்கவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளும் விரிவான முறையில் செய்யப்பட்டுள்ளன. (001)

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் ஒளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# களுவாஞ்சிகுடி மெக்ஸ் கழகம் சம்பியன்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சென்றல் கேம்ப் விளையாட்டுக் கழகம் 64 அணிகளை உள்ளடக்கி நடாத்திய அணிக்கு 7 பேர் 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிறிக்கெட் சுற்றுப் போட்டியில் களுவாஞ்சிகுடி மெக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தினையும் 40,000 ரூபாய் பணப்பரிசினையும் தனதாக்கிக் கொண்டது. மேற்படி சுற்றுப் போட்டியில் களுவாஞ்சிகுடி மெக்ஸ் விளையாட்டுக்கழகம் முதலாவது போட்டியில் டைட்டன்ஸ் விளையாட்டுக் கழகத்தையும், இரண்டாவது போட்டியில் கதிரவன் விளையாட்டுக் கழகத்தையும், மூன்றாவது போட்டியில் செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தையும், காலிறுதிப் போட்டியில் அக்னிஸ்டார் விளையாட்டுக் கழகத்தையும், அரையிறுதிப் போட்டியில் நியூ எவரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தையும், இறுதிப் போட்டியில் ஈஸ்டன் சலன்ஜேர்ஸ் விளையாட்டுக் கழகத்தையும் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.







# விபுலானந்த மண்டபத்தில் கர்நாடக இசைக்கச்சேரி



(வி.ரி. சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி நடத்திய கர்நாடக இசைக் கச்சேரி அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தியது .

முன்னதாக கலைஞர்கள் சுவாமி விபுலானந்த அடிகளாரின் இல்லத்தில் விசேட பூஜை செய்து அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக இசைத் துறை

சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீவிக்ரமகீர்த்தி திருமதி கிருபாஞ்சனா கேதீஸ் கலந்து சிறப்பித்தார் .

இந்தியாவில் இசைத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண (வாய்ப்பாட்டு), சுதாகரன் கோவிசரண் (மிருதங்கம்) ,பிரிசில்லா ஜோர்ஜ் (வயலின்) ஆகியோர் இந்த கர்நாடக இசைக்கச்சேரியை ஒன்றரை மணி நேரம் முதல் தடவையாக சிறப்பாக நடத்தினர்.

நிகழ்வில் விபுலானந்த பணி மன்ற தலைவர் சோ.சுரநுதன் தலைமையுரையாற்ற செயலாளர் கு.ஜெயராஜி அறிமுக உரையாற்றினார்.

கர்நாடக இசைக் கச்சேரி தொடர்பான நயவுரையை பணி மன்றத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார் .

இசைக் கச்சேரி நடாத்திய மூன்று கலைஞர்களுக்கும் விபுலானந்த பணி மன்றத்தினர் பொன்னாடை போர்த்தி விபுலனின் திருவுருவப்படம் பொறித்த நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

# கல்முனை றோயல் கல்லூரி மாணவர்கள் நூலகத்திற்கு



(அஸ்லம் எஸ். மௌலானா)

கல்முனை கிரீன் பீல்ட் றோயல் கல்லூரியின் தரம்-03 மாணவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை கல்முனை மாநகர பொது நூலகத்திற்கு விஜயம் செய்து, நூலக செயற்பாடுகளை பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் மாணவர்கள் வரவேற்கப்பட்டு, நூலகத்தின் சிறப்பம்சங்கள், பயன்பாடுகள் தொடர்பாக இம்மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்நூலகத்தில் சிறுவர்களுக்கென பிரத்தியேகமாக சிறுவர் பகுதி அமைக்கப்பட்டு, சிறுவர்களுக்கான அறிவுசார் சஞ்சிகைகள், கதைப் புத்தகங்கள், கவிதை மற்றும் பாடல் நூல்கள், கல்விசார் நூல்கள் அனைத்தும் வைக்கப்பட்டிருப்பதாகவும் மாணவர்கள் இங்கு வந்து இவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் எனவும் நூலகர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். வகுப்பாசிரியர் ரி.எம். பிர்னாஸின் நெறிப்படுத்தலில் மாணவர்கள் இங்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.




## சிலிண்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைநிறுத்தும் போட்டியில் தீர்மானங்களை அறிவித்துள்ளதாக கூறியுள்ளனர்.

எனவேதான தபால் மூல வாக்களிப்பும் இடம்பெறவுள்ள சூழலில் கல்வியாளர்கள் அரச உத்தியோகத்தர்கள் கடந்தகால அரசியல் நிலைமைகளை அனுபவரீதியாக கண்டவர்கள். எனகவே எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்து அவரது வெற்றியை உறுதிப்படுத்துமாறு கேட்டக்கொள்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.( 001)

## தமிழ்மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவாதம் மற்றும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

குறித்த திருத்தச்சட்டமூலம் இன்றைய தினம் மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

நேற்றைய தினம் நான் ஜனாதிபதிக்கு அழைத்த போது, மூன்றாம் வாசிப்புக்காக இந்த திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் சபாநாயகருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்துவதாகவும் கூறினார்.

ஆனால், இலங்கை தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேறு வேட்பாளர் ஒருவரை ஆதரிக்க தீர்மானம் எடுத்தமையால் இதனை இன்றைய நிகழ்சி நிரலில் உள்வாங்காது தடுத்துள்ளனர்.

ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்காமையால் தமிழர்களை பழிவாங்கியுள்ள ரணில். ரணில் விக்ரமசிங்க தமது காலத்தை முடிக்கும் தருணத்தில் ரணில் ராஜபக்ஷ என்று நிஷரூபித்துள்ளார் என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

## வவுனியவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜ/ன ரணதுங்க, ரிஷாத் பதியுதீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹிருணிகா பிரேமச்சந்திர, /ஹனைஸ் பாஷரூக், ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா அமைப்பாளர்களான சா.நிரோஸ்குமார், றசிக்கா பிரியதர்சினி, கருணாதாஸ மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்

## பாரிஸ் பரா ஒலிம்பிக் போட்டி: இலங்கைக்கு முதல் பதக்கம்

*பாரிஸ் பரா ஒலிம்பிக் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய சமிதா துலான் நேற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். கு64 வகை ஈட்டி எறிதல் போட்டியில் அவர் பதக்கம் வென்றுள்ளார்.*

*சமிதா துலான் 67.03 மீற்றர் தூரம் வீசி வெள்ளிப் பதக்கத்தை வென்றார், இது கு44 பிரிவில் அவர் வைத்திருந்த உலக சாதனையை புதுப்பித்துள்ளது.*

*இந்தப் போட்டியில் இந்தியா தங்கப் பதக்கத்தையும், அவுஸ்திரேலியா வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளன.*

*முன்னதாக, 2020 டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டியில் கு44 பிரிவில் ஈட்டி எறிதலில் சமிதா துலன் வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார்.*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2024இல் வெளியிடப்பெற்றது.